[2018 ஜனவரி 10

17—

குளிர்பதனக் கிடங்கு

***2815—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், ராயக்கோட்டையில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், ராயக்கோட்டையில் ரூ.2 கோடியே 50 இலட்சம் மதிப்பில் காய்கறிகளைப் பாதுகாப்பதற்கு விநியோக தொடர் மேலாண்மை திட்டத்தின்கீழ் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு எங்கள் தொகுதி மக்களின் சார்பாக வரவேற்று நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அந்தப் பணி சிறப்பாக நடைபெற வேண்டும், துரிதமாக நடைபெற வேண்டும் என்றும் வேகமாக நடைபெற்று அது விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்பெற்ற பின்பு, விவசாயிகளிடத்திலே ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுமா, இல்லை மின் கட்டணம் என்று*

2018 ஜனவரி 10]

சொல்லி வசூலிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2,118 ஹெக்டேர் பரப்பளவில் காய்கறி பயிரிடப்பட்டு 68,350 மெட்ரிக் டன் காய்கறி உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 67 ஆயிரம் மெட்ரிக் டன் விற்பனை உபரியாக உள்ளது. இதைச் சேமிப்பதற்கு ராயக்கோட்டையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள பாலக்கோடு மற்றும் ராயக்கோட்டையிலிருந்து 36 கி.மீ. தொலைவில் உள்ள ஓசூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்பட்டு வருகிறது. அதோடு, காய்கறி மற்றும் பழங்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.6 கோடியே 30 இலட்சம் மதிப்பில் ஓசூரில் 350 மெட்ரிக் டன் கொள்ளளவிலும், 55 கி.மீ. தொலைவில் உள்ள போச்சம்பள்ளியில் 75 மெட்ரிக் டன் கொள்ளளவிலும் மற்றும் 32 கி.மீ. தொலைவில் உள்ள கிருஷ்ணகிரியில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவிலும் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும்பொழுது, விவசாயிகள் மேற்கண்ட வசதிகளையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்படி குளிர்பதனக் கிடங்கைப் பயன்படுத்தும் விவசாயிகளிடமிருந்து ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுமா என்று கேட்டார். சேவை வரி மற்றும் பராமரிப்புச் செலவுக்கான தொகை மட்டும் பெற்றுக்கொள்ளப்படுமே தவிர, வேறு எந்தக் கட்டணமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

முற்பகல் 10–45

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல எங்களுடைய வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதி,

[2018 ஜனவரி 10

சூளகிரி பகுதியிலும் காய்கறிகள் மற்றும் கொத்தமல்லி, புதினா, கீரை வகைகள் அதிகப்படியான அளவில் விளைச்சல் செய்து வருகிறோம். சூளகிரி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளது. இங்குள்ள விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், புதினா, கொத்தமல்லி, கீரை வகைகளைக் கொண்டுவந்து வியாபாரம் செய்ய போதிய இடமில்லாததால், சாலையோரங்களில் வைத்து வியாபாரம் செய்கிறார்கள். அதன் காரணமாக, அங்கே அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. சூளகிரியில் இருக்கின்ற சந்தைக்கு பல மாநில வியாபாரிகளும் வருகின்றார்கள். எனவே, விவசாயிகளின் நலன் கருதி, சூளகிரியில் வேளாண் துறையின் சார்பாக ஒரு மார்க்கெட்டும் மற்றும் ஒரு குளிர்பதனக் கிடங்கும் அமைத்துக் கொடுத்தால், அப்பகுதியில் உள்ள விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைவார்கள். ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சூளகிரியில் மார்க்கெட்டை அமைத்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றுதான், தேவையான அளவிற்கு இப்போது குளிர்பதனக் கிடங்குகளும், Market Committee–களும் அமைக்கப்படுகின்றன. ஆகவே, தேவை ஏற்படின், அதனை ஆராய்ந்து மார்க்கெட்டை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ளது. அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற காய்கறிகள் தமிழ்நாடு முழுவதும் மட்டுமல்லாமல் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, குஜராத் போன்ற அண்டை மாநிலங்களுக்கும் பல இலட்சக்கணக்கான டன் அளவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு, சில நேரங்களில் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்காத காரணத்தினால், காய்கறிகளை குளிர்பதனக் கிடங்கில்

2018 ஜனவரி 10]

வைத்து பாதுகாக்க, ஏற்கெனவே 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு கட்டப்பட்டிருந்தாலும், அது போதுமானதாக இல்லை. வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்திற்குச் சொந்தமான 18 ஏக்கர் இடம் அங்கு உள்ளது. எனவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஒட்டன்சத்திரத்தில் 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கூறியதுபோல், ஒட்டன்சத்திரத்தில்தான் தமிழ்நாட்டிலேயே அதிகளவில் காய்கறிகளும், பழங்களும் உற்பத்தி செய்யப்பட்டு, சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன. ஆகவே, அவருடைய கோரிக்கையை ஏற்று, தேவை இருப்பின், ஒட்டன்சத்திரத்தில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இயக்கத்தைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் எங்களது செயல் தலைவரை வணங்குகிறேன். நத்தம் தொகுதியில் மா, புளி, கொய்யா, சீத்தாப்பழம் போன்றவை அதிகளவில் விளைகின்றன. அதனைச் சேமிப்பதற்கு அங்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 7 இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒட்டன்சத்திரத்திலும், இரண்டு இடங்களில் 15 மெட்ரிக் டன் மற்றும் 5 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக்

கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே, எதிர்காலத்தில் தேவை ஏற்படின், குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேடசந்தூர் தாலுகா மற்றும் அருகில் இருக்கின்ற திண்டுக்கல் தாலுகா, அரவக்குறிச்சி போன்ற பகுதிகளில் எல்லாம் முருங்கை, தக்காளி, வெங்காயம் மற்றும் சீத்தாப்பழம் போன்றவை அதிக அளவில் விற்பனையாகிக் கொண்டிருந்தன. அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்களுக்கு, அதை முறையாக விநியோகம் செய்வதற்கும், அதைப் பாதுகாத்து வைத்து, நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்வதற்குமான வசதிகள் இல்லாத காரணத்தினால், அவர்கள் வெள்ளக்கோவில், ஒட்டன்சத்திரம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, விவசாயிகளின் ஆர்வம் சற்று குறைந்து காணப்படுகிறது. முருங்கை, வெங்காயம் போன்றவை எல்லாம் மிக அதிகமான அளவில் உற்பத்தியாகக்கூடிய இடங்கள் அங்குள்ளன. இன்று அந்த விவசாயிகள் எல்லாம், அந்தத் தொழிலை விட்டு, கேரளா போன்ற இடங்களுக்குச் சென்று வேறு மாற்று தொழிலுக்குச் செல்கின்ற ஒரு சூழல் இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய ஆளுநர் உரையில் அறிவித்ததைப்போல அழுகுகின்ற காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான விநியோகத் தொடரமைப்பு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் வேடசந்தூரை மையமாகக் கொண்டு, அதனைச் சுற்றி இருக்கின்ற மூன்று தாலுகாகளைச் சேர்ந்த விவசாயிகளும் பயன்பெறுகின்ற வகைகளில் ஒரு விநியோக வர்த்தக மையம் மற்றும் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமென்று தாழ்மையோடு தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி, திண்டுக்கல், கோபால்பட்டி, வத்தலக்குண்டு, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் குளிர்பதனக்*

2018 ஜனவரி 10]

கிடங்கு அமைக்கப்பட்டு, விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப, உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், பழங்களை வைப்பதற்கு இடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, தேவை ஏற்படின், குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

ஆரம்ப சுகாதார நிலையம்

***9198—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விஜயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்திலே ஏற்கெனவே திங்களூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. விஜயமங்கலம் என்பது அதே ஒன்றியத்தில் வருகின்றது. அங்கேயும் அதிக பிரசவங்கள் நடைபெறுகின்றன. மாதத்திற்கு 15 பிரசவங்களுக்கு மேலே அங்கே நடைபெறுகின்றன. வருங்காலத்திலே அங்கே நடைபெறக்கூடிய பிரசவங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அதைத் தரமுயர்த்துவதற்கு அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.